மூடர் கூட்ட அரசின் விளம்பர வெறியால்

கடைமடையில் கருகும் பயிர்கள்!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வேதனை!

சென்னை, அக். 17 -

"மூடர் கூட்ட அரசின் விளம்பர வெறியால் கடைமடையில் பயிர்கள் கருகுகின்றன" என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேதனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முகநூல் பதிவு வருமாறு:-

மேட்டூரில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் டெல்டாவின் கடைமடை பகுதிகளுக்கு வந்து சேராமல் சம்பா பயிர்கள் காய்கின்ற நிலையில், தற்போது அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்படவுள்ளதால் பயிர்களை எப்படி காப்பாற்றுவது என்று புரியாமல் டெல்டா விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜூன் மாதம் தண்ணீர் திறக்கப்படாததால் ஏற்கனவே குறுவை சாகுபடி பொய்த்தது. இப்போது சம்பாவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது.

மேட்டூர் அணையில் நீர் இருப்பு குறைவாக உள்ளதால், செப்டம்பர் 1ஆம் தேதி தண்ணீர் திறப்பதற்கு பதிலாக கொஞ்சம் தாமதமாக தண்ணீர் திறக்க வேண்டும் அப்போது தான் நெல்மணி முளைத்து வருகின்ற கால கட்டத்தில் தண்ணீர் பற்றாக்குறை இருக்காது என்று டெல்டா விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.



அவசரகதியில்
மேட்டூரில் தண்ணீர் திறப்பு!

விவசாயிகளின் நடைமுறை சிக்கல் புரியாமல், Reels வெறி கொண்டு அவசரகதியில் இந்த Dummy CM தண்ணீர் திறந்துவிட்டார். இப்போது உரிய நேரத்தில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் கருகுகின்றன.

எந்த ஒரு திட்டமிடலும் இல்லாமல் விவசாயிகளின் பேச்சையும் கேட்காமல் தன்னிச்சையாக செயல்பட்டு குறுவை சம்பா இரண்டையும் இல்லாமல் செய்திருக்கிறது இந்த கோமாளி சர்க்கார்.

ஏற்கனவே அரிசி பருப்பு விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. தினத்தந்தியின் இன்றைய முதல் பக்க தலைப்புச்செய்தியே விலைவாசி உயர்வு பற்றித்தான் என்பது முதல்வருக்கு தெரியாதா?

விவசாயிகள் பிரச்சினைகளைத் தீர்க்க முதல்வர் ஆய்வுக் கூட்டம் நடத்துவாரா?

இப்படிப்பட்ட சூழலில் நிர்வாகத்திறனற்ற இந்த ஆட்சியாளர்களால், உணவு உற்பத்தி மேலும் பாதித்து, விலைவாசி இன்னும் உயருகின்ற அபாயம் ஏற்பட்டுள்ளது.

வேளாண்துறைக்கு செயலாளர் இல்லாததை நாம் சுட்டிக்காட்டிய பிறகு, வேளாண் செயலாளரை நியமித்த முதலமைச்சர், விவசாயிகள் பிரச்சினையை தீர்ப்பதற்கான Review Meetingஐயும் நாம் சொன்ன பிறகு தான் நடத்துவாரா?

இப்பிரச்சினை குறித்து உடனே ஆய்வுக்கூட்டங்களை நடத்தி, டெல்டாவை வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்க வேண்டும். விவசாயிகளுக்கு அனைத்து நிவாரண உதவிகளையும் இந்த ஆட்சியாளர்கள் உடனடியாக வழங்க வேண்டும்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் கூறியுள்ளார்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(14.10.2026)



1. மதுரை அருகே விரகனூரில் பைக்கில் சென்ற இருவரை விரட்டிச் சென்று சரமாரியாக வெட்டிய கும்பல்...

2. கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே குடிபோதையில் ஆட்டோ ஓட்டுநர் களுக்குள் தகராறு, கத்தியால் குத்தியதில் ஒருவர் படுகாயம் ..

3. குமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே ஓடும் ரயிலில் இளம் பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த வாலிபர் சிக்கினார் ...

4. திருநெல்வேலி பேருந்து நிலையம் அருகே வேலைக்குச் சென்ற பெண்ணிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட ரவுடி ....

5. சென்னை சாஸ்திரி நகரில் இளம்பெண்ணுக்கு டார்ச்சர் கொடுத்த வாலிபரை கண்டித்த பெண்ணின் தந்தைக்கு கத்திக் குத்து ...

6. சிவகாசியில் சாலையில் நடந்து சென்ற இளம் பெண்ணிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட வாலிபர் சிக்கினார்....

7. திருத்தணி அருகே ஆர்.கே. பேட்டையில் 80 வயது மூதாட்டிக்கு பாலியல் தொல்லை அளித்த 7 ஆம் வகுப்பு படிக்கும் சிறுவன் சிக்கினான்...

8. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த 7 வயது சிறுமி மாயம் ....

9. சென்னை தேனாம்பேட்டையில் கல்லூரி மாணவியை விரட்டிச் சென்று டார்ச்சர் கொடுத்த வாலிபர் சிக்கினார் ...

10. திருவாரூர் அருகே செவிலியர் குளித்ததை செல்போனில் வீடியோ எடுத்தவர் சிக்கினார்" செல்போனில் மேலும் சில பெண்களின் வீடியோக்கள் இருப்பதாக கூறப்படும் நிலையில் காவல்துறை தீவிர விசாரணை....



11. சிதம்பரம் அருகே அண்ணாமலை நகர் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட P.N. நகரில் ரேஷன் கடை ஊழியர் வீட்டில் பட்டப்பகலில் பூட்டை உடைத்து வெள்ளிப் பொருட்கள் முக்கிய ஆவணங்கள் திருட்டு....

12. ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே சீனாபுரம் கிராமத்தில் நடந்து சென்ற மூதாட்டியிடம் மூன்று சவரன் செயினை பறித்துச் சென்ற பைக் ஆசாமிகள் ...

13. சென்னை அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ. காலனியில் உள்ள ஏ.டி.எம்.மில் நூதன மோசடி செய்து பணம் கொள்ளை ....

14. சென்னை வியாசர்பாடியில் பூ வியாபாரியின் வீட்டின் பூட்டை உடைத்து நகை மற்றும் பணம் கொள்ளை...

15. கோவையை அடுத்த பெரிய நாயக்கன் பாளையத்தில் திருமண தோஷ பரிகாரம் செய்வதற்கு வந்த பெண் இன்ஜினியரிடம் பலாத்காரம் செய்ய முயற்சித்த ஜோதிடர்...

16. விழுப்புரம் மாவட்டம் காணை அருகே ஆயாத்தூர் கிராமத்தில் பாளையத்தம்மன் கோவில் இரண்டு உண்டியல்கள் அடியோடு அறுத்து திருட்டு, கோவில் மணியையும் அறுத்து எடுத்துச் சென்றனர் ...



17. சென்னையை அடுத்த திருவேற்காடு அடுத்த கீழ் அயனம்பாக்கத்தில் நண்பரை தாக்கியதால் ஆத்திரம், வாலிபர் வீட்டின் மீது பெட்ரோல் குண்டுகள் வீச்சு ....

18. சென்னை முகப்பேர் அருகே கொலை வழக்கில் சாட்சி சொல்லக் கூடாது என தே.மு.தி.க. பிரமுகருக்கு கொலை மிரட்டல் , பயந்து போய் காவல் நிலையத்தில் தஞ்சம் புகுந்ததால் பரபரப்பு ...

19. சென்னை வடபழனி கங்கை அம்மன் கோவில் தெருவில் கஞ்சா போதையில் இருந்த வாலிபர் மகூதியில் புகுந்து கண்ணாடி, சேர் டேபிள் ஆகியவற்றை உடைத்து ரகளை, விசாரிக்க வந்த காவல்துறையினரை தாக்க முயற்சி....

20. சென்னை வண்ணாரப்பேட்டை எம்.சி. ரோட்டில் நடைபாதை கடைகளை அகற்றக்கோரி நிரந்தர கடை உரிமையாளர்கள் 500க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டம், மறியல், போலீசார் உடன் வாக்குவாதம் தள்ளுமுள்ளு....

21. தர்மபுரி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியின் போது அமைச்சர் ராஜ்குமார் பேசிய போது மின்சாரம் துண்டிப்பு ...

22. சென்னை திருவொற்றியூர் பத்திரப்பதிவு அலுவலகம் அருகே அரசு போலி முத்திரைத்தாள்கள் தயாரித்து பல கோடி ரூபாய் சுருட்டிய கும்பல் ....

கோவை மாநகராட்சியில் ஒரு சில

ஒப்பந்ததாரர்களுக்கு 50 க்கும் மேற்பட்ட பணிகள்!

கழக தீர்மானக்குழுச் செயலாளர் நா.கார்த்திக் மனு!

கோவை, அக். 17 -

கோவை மாநகராட்சியில் ஒரு சில ஒப்பந்ததாரர்களுக்கு 50 க்கும் மேற்பட்ட பணிகள் வழங்கப்பட்டிருப்பதாகவும், இதனால் கோவை மாநகராட்சிக்குட்பட்ட சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில், தெருவிளக்குகள், பூங்கா பராமரிப்பு மற்றும் சாலை சீரமைப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தொடர்பான பணிகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி கழக தீர்மானக்குழு செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான நா.கார்த்திக் மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜாவிடம் மனு அளித்தார். மனுவை பெற்றுக் கொண்ட மாநகராட்சி ஆணையாளர் இதுதொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.



இந்த மனுவில், ஏற்கனவே நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப் பணிகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும் செய்தியாளர்களிடம் கூறியதாவது : கழகத் தலைவர், என்நாளும் எங்கள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிடம் மாடல் ஆட்சிக் காலத்தில் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பணிகளுக்கான மதிப்பீடுகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும், பணிகள் நிறுத்தப்பட்டதால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாகவும், அவற்றை மீண்டும் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும், கோவை மாநகராட்சியில் ஒரு சில ஒப்பந்ததாரர்களுக்கு மட்டும் 50 க்கும் மேற்பட்ட ஒப்பந்தப் பணிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இதில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சிங்காநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் தொடர்ந்து மக்களைச் சந்திப்பதில்லை என்றும், இதனால் பொதுமக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் சிரமம் ஏற்படுவதாகவும் விமர்சித்தார். தொகுதியில் சாலைப் பள்ளங்கள் உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகள் நிலவி வருவதாகக் குறிப்பிட்ட அவர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே, தொகுதியில் மதுபான விற்பனை தொடர்பாக வெளியாகியுள்ள வீடியோ விவகாரத்தில் காவல்துறையினர் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிரமணியம், வட்டக் கழக பொறுப்பாளர் டவுன் பா.ஆனந்த், மாமன்ற முன்னாள் உறுப்பினர் என்.கேசவன், கழக நிர்வாகிகள் சு.தனபால், சிடிசி. நடராஜ், பாலச்சந்திரன், அருண், சுந்தர்ராஜ் உடனிருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மன்னை ப. நாராயணசாமி

அக்டோபர் 17 (1993)



'தஞ்சை மாவட்ட பெரியார்' என்று போற்றப்பட்டவர்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் சீடராய், அறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்ற இளவலாய், கலைஞருக்கு உற்ற தோழராய் விளங்கியவர்.

தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் முதன்முதலாக அறிவிக்கப்பட்டபோது "பெரியார் விருது" பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

"காடம்பாறை நீர் மின்திட்டம்"

திட்டமிட்டு இருட்டடிப்பு செய்யப்படும் முத்தமிழறிஞர் கலைஞரின் சாதனைகள்!

வலைதளத்தில் வலம் வருவது!

வால்பாறை உச்சியில் உள்ள "நீரார் அணை கட்டப்பட்டது காமராஜரால். ஆனால் இதனால் தமிழகத்திற்கு யாதொரு பிரயோஜனமும் இல்லை. ஏனெனில் அணை மதகுகள் திறக்கப்பட்டதும் தண்ணீர் கேரள எல்லையைத் தொட்டுவிடும். இந்தத் தண்ணீர் தான் அதிரம்பள்ளி நீர்வீழ்ச்சிக்கான major source.

அதன்பின் ஆட்சிக்கு வந்த தி.மு.க.வின் பொதுப்பணித் துறை அமைச்சராக பதவியேற்ற கலைஞர் அவர்கள் அந்த அணைக்கு எதிர்ப்புறம் மலையைக் குடைந்து அந்தத் தண்ணீரை சோலையாறு அணைக்குக் கொண்டு செல்லத் திட்டம் தீட்டி அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடர்ந்தார்.

20அடிக்கு 20அடி என்ற அளவில் "D போன்ற அமைப்பில் 8.5 கி.மீட்டர் தூரத்துக்கு ஒரே நேர் கோட்டில் வெட்டப்பட்ட குகைக் கால்வாய் இது. பராமரிப்புப் பணிகளுக்காக இந்தக் குகைக்குள் முழு 8.5 கி.மீட்டருக்கும் இன்றும் டிராக்டரில் பயணிக்கிறார்கள்.

அடுத்து பேரறிஞர் மறைய முதல்வராக கலைஞர் பதவியேற்க, சாதிக்பாட்சா அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்து இத்திட்டத்தை முடித்து வைத்தார். கலைஞர் திறந்து வைத்தார். இந்தக் காலகட்டம் 1968 முதல் 1972 வரை ஆகும்.

இந்தத் தண்ணீர் மலைக்கு கையை விட்டு வெளியேறிய பின்னர் அதே பாதையில் "நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதுதான் "காடம்பாறை நீர் மின் உற்பத்தித் திட்டம் ஆகும். இதுவும் தி.மு.க தான் திட்டமிட்டு நிறைவேற்றியது. பின்னர் சோலையார் அணையிலிருந்து மலைப் பகுதியில் திறந்த வெளிக் கால்வாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு ஆழியாறு அணையைச் சென்றடைகிறது. இதன்மூலம் தான் பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை பகுதிகள் பாசன வசதி பெற்றன. இது வரலாறு.

தி.மு.கவினருக்கே இது புதிதாகத் தோன்றலாம். பதிவில் சொன்னபடி இதுதான் உண்மை. கலைஞரின் சாதனைகள் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன.

முகநூலில் வந்த பதிவு.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எஸ். இராகவானந்தம்

அக்டோபர் 17 (1999)



திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர்.

தொழிற் சங்கத் தலைவராக பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக அமைச்சராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.